சென்னை, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்,
முன்னிலை: முனைவர் மு. கருணாகரன், இ.ஆ.ப.,
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர்.

---

ந.க.எண்.37670/2018/இ2 நாள்.17.12.2020.

பொருள்: நிர்வாகம் – கைத்தறி மற்றும் துணிநூல் துறை – கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி சரகம் – திரு வா.மணிகண்டன், இளநிலை உதவியாளர் – கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

4673
23 DEC 2020

பார்வை:
1. அரசு ஆணை (நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (எம்) துறை, நாள்.01.08.2018.
3. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 37670/2018/இ2, நாள். 22.08.2019.
4. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.37670/2018/இ2, நாள்.26.11.2019.
5. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள்.23.01.2020.
6. அரசுக் கடிதம் எண்.9192/இ2/2019–2, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (இ2) துறை, நாள்.04.03.2020.

*******

ஆணை:

பார்வை (1)–ல் கண்டுள்ள அரசாணையில் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதி தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்பட்டது.

2) பார்வை (2)–ல் கண்டுள்ள அரசாணையில் கருணை அடிப்படையிலான பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பணி வரன்முறை குறித்து தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெற தேவையில்லை என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3) பார்வை (3)–ல் கண்டுள்ள செயல்முறை ஆணையின்படி, திருநெல்வேலி சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகத்தில் மசால்ஜியாக பணிபுரிந்து வந்தபோது காலமான அமரர். சொ. வானுமாமலை, சிறப்புநிலை மசால்ஜியின் வாரிசுதாரரும், மகனுமாகிய திரு. வா. மணிகண்டன் என்பவருக்கு கருணை அடிப்படையில் "இளநிலை உதவியாளர்" ஆக கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் தனியர் 04.09.2019 அன்று முற்பகல் கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநரகத்தில் பணியில் சேர்ந்தார்.

2..

4) பார்வை (4)-ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதம் மூலம், கருணை அடிப்படையில் "இளநிலை உதவியாளர்" ஆக கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்தில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு. வா. மணிகண்டன் என்பவருக்கு பணிவரன்முறைப்படுத்துவது தொடர்பாக ஆணை வழங்குமாறு அரசிடம் கோரப்பட்டது.

5) அதனைத் தொடர்ந்து, பார்வை (6)-ல் குறிப்பிட்டுள்ள அரசுக் கடிதத்தில், மேற்படி தனியரின் பணியினை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக பார்வை (2) மற்றும் (5) ஆகிய அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

6) எனவே, மேற்படி பார்வையில் கண்டுள்ள அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி, திரு வா.மணிகண்டன், இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 04.09.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணி நிலையில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எ ண் | பெயர் (திருவாளர்) | கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட பணியிடம் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | வா.மணிகண்டன், இளநிலை உதவியாளர் | கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகம், சென்னை | கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலி சரகம் | 04.09.2019 முற்பகல் |

7) திரு வா.மணிகண்டன், இளநிலை உதவியாளரது தகுதிகாண் பருவமானது இளநிலை உதவியாளர் பணிநிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாளான 04.09.2019 முற்பகல் முதல் தகுதிகாண் பருவ தொடக்க நாளாக கணக்கிடப்பட்டு ஆணையிடப்படுகிறது. இவர் மூன்றாண்டு காலம் தொடர் பணியில் இரண்டாண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவத்தினை முடிக்கப்பெற வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்.

8) இது தொடர்பான பதிவுகள் தனியரின் பணிப்பதிவேட்டில் பதியப்படும் என சான்றளிக்கப்படுகிறது.

17.12.2020

இயக்குநர்.

17.12.2020

பெறுநர்
திரு வா.மணிகண்டன், இளநிலை உதவியாளர்,
கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகம்,
திருநெல்வேலி. (வழி --- திருநெல்வேலி சரக உதவி இயக்குநர்)

7/3/2022
Assistant Director
of Handlooms and Textiles
Tirunelveli

நகல்
1. அரசு முதன்மைச் செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, தலைமைச்செயலகம், சென்னை-9 அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர், திருநெல்வேலி சரகம்.
3. மாவட்ட கருவூலம் / சார்நிலை கருவூலம், திருநெல்வேலி. (வழி --- திருநெல்வேலி சரக உதவி இயக்குநர்)
4. தனியரின் பணிப்பதிவேடு.
5. இருப்புக் கோப்பு.

கைத்தறி மற்றும் துணி நூல் உதவி இயக்குநர் அலுவலகம் திருநெல்வேலி - 627 011.

ந.க.எ. 2798/2019 நாள்: 13.02.21

அனுப்பப்படுகிறது. உதவி இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல், திருநெல்வேலி. 13/2/2021

பெறுநர்
திரு வா.மணிகண்டன், இ.நி.உ.

F:\nextfile 2\Compassionate Appt\Regularization.doc